//தனிக்கவனம்//
// மிக மிக அவசரம்//

வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 2540/அ3/2022, நாள். 16.05.2023

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – அரசு/ நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 01.08.2022 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்தல் – உபரி பட்டதாரி ஆசிரியர்களை 22.05.2023அன்று 09.00 மணியளவில் நடைபெறும் பணிநிரவல் கலந்தாய்வில் கலந்துகொள்ள ஏதுவாக பணியிலிருந்து விடுவிக்க தெரிவித்தல் – தொடர்பாக. |
| பார்வை: | சென்னை–6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநர் அவர்களின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 054550/சி3/இ1/2022, நாள். 29.04.2023. |

---

வேலூர் மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் அரசு/நகராட்சி உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 01.08.2022 நிலவரப்படி மாணாக்கர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டு, உபரியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்கள் தங்கள் பள்ளியில் பணிபுரியும் பட்டதாரி உபரி ஆசிரியர்களை **22.05.2023 அன்று 09.00 மணியளவில்** நடைபெறும் பணிநிரவல் கலந்தாய்வில் பங்கேற்க ஏதுவாக பணியிலிருந்து விடுவித்து அனுப்புமாறு சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பட்டதாரி ஆசிரியர்கள்
விவரம் (பாடவாரியாக)

**இடம் – ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி (SSA)**
**காந்திநகர், காட்பாடி,**
**வேலூர் மாவட்டம்.**

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
அனைத்துவகை அரசு/நகராட்சி
உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள்,
வேலூர் மாவட்டம்.